2024 பிப்ரவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி வனத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்க வேண்டிய கேள்வி. நீங்களே சொல்கிறீர்கள். 3 கோடி ரூபாய் சுற்றுலாத் துறைமூலம் நிதி ஒதுக்கீடு செய்து, அங்கு பணிகள் ஆரம்பிக்கும்போது வனத் துறையினர் யானைகள் வழித்தடம் என்று தடுத்துவிட்டார்கள் என்று சொல்கிறீர்கள். இந்த நிலையில், யானைகள் வழித்தடம் என்று அறிவித்த பின்பு, எந்தப் பகுதியிலும் நாம் எந்த development-ம் செய்யமுடியாத சூழ்நிலை உள்ளது என்பது உங்களுக்கே தெரியும். அதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அது யானைகள் வழித்தடம் என்பதால் வனத் துறையிடம் அனுமதி கேட்டு, ஆட்சேபணை ஏதும் இல்லை என்ற சான்றிதழைப் பெற்றுத் தந்தால், நிச்சயமாக வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

39—

இராஜகோபுரம்

***51033—திரு. S. சதாசிவம்:** மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் நகராட்சிப் பகுதியில் உள்ள அருள்மிகு மீனாட்சி சொக்கநாதர் மற்றும் ஞானதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு புதிய இராஜகோபுரம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற இந்தத் திருக்கோயில் 30 ஆண்டுகளுக்கு முன்பு குடமுழுக்கு நடத்தப்பட்ட திருக்கோயிலாகும். இந்தத் திருக்கோயிலில் தற்போது விமானங்கள்

மற்றும் பரிவார சன்னதிகள் ஆகியவற்றிற்கு 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் இன்றைக்கு திருப்பணி துவங்க பாலாலயம் செய்யப்படுகின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய மூன்று நிலை இராஜகோபுரத்திற்குண்டான மண் பரிசோதனைப் பணி முடிந்திருக்கின்றது. தொடர் நடவடிக்கையாக, அடுத்த கட்டப் பணிகளை விரைவுபடுத்தி, கூடிய விரைவில், அந்த மூன்று நிலை இராஜகோபுரம் கட்டுகின்ற பணிகள் துவக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள்.*

திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதிக் காவலர், மருத்துவர் அய்யா அவர்களையும், மத்திய சுகாதாரத் துறை முன்னாள் அமைச்சர் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய மாநிலத் தலைவர் அண்ணன் அன்புமணி அவர்களையும், மரியாதைக்குரிய அண்ணன் பெண்ணாகரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்களையும் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய காலை வணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றேன்.*

நமது மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், மேட்டூர் நகராட்சியில் மீனாட்சி சொக்கநாதர் கோயில் மற்றும் ஞானதண்டாயுதபாணி கோயில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்ற செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அந்தக் கோயிலுக்கு இராஜகோபுரம் வேண்டும் என்று கேட்டோம். அதுவும் ஆய்வில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கோயிலின் 17 சென்ட் நிலம் ஆக்கிரமிப்பில் இருக்கிறது. அதையும் மீட்க வேண்டும். அந்தக் கோயிலில் குடமுழுக்கு செய்யும்போது, அன்னதானம் வழங்கும் திட்டத்தைச் சேர்க்க வேண்டும். கொளத்தூர் ஒன்றியம், பாலவாடியில் ஜலகண்டேஸ்வரர்

2024 பிப்ரவரி 21]

கோயில் 15 ஆண்டுகளாக குடமுழுக்குச் செய்யப்படாமல் இருக்கின்றது. அதையும் செய்து கொடுக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு இன்னொரு கேள்விக்கான வாய்ப்பு இருக்கிறது. எனவே, இவை எல்லாவற்றிற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும்.

திரு. S. சதாசிவம்: நான் பிறந்த கோனூர் கிராமத்தில் சென்றாயப்பெருமாள் கோயில் குடமுழுக்கு செய்யப்படும் என்று நீங்கள் அறிவித்தீர்கள். பணி முடிந்த நிலையில் இருக்கிறது. கும்பாபிஷேகம் எப்போது நடத்தப்படும் என்பதை அறிவிக்க வேண்டும். மேட்டூர் பகுதியிலுள்ள கூலி லேனிலுள்ள காளியம்மன் கோயிலுக்கு குடமுழுக்கு செய்ய வேண்டும். அதைச் செய்வீர்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, இதுவரையில் 5,718 கோடி ரூபாய் அளவுக்கு சொத்துகள் மீட்கப்பட்ட வரலாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியிலே நடந்தேறியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த 17 சென்ட் நிலத்தை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து உடனடியாக மீட்பதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆட்சியில், குடமுழுக்குகளைப் பொறுத்தளவில், இன்றைக்கு மட்டும் 32 திருக்கோயில்களில் குடமுழுக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இது இன்று ஒருநாள் மட்டும்.

இந்து சமய அறநிலையத் துறையின் வரலாற்றில் இல்லாத அளவிற்கு, இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, ஒட்டுமொத்தமாக 1,428 திருக்கோயில்களுக்கு—அதாவது, 33 மாதங்களில் இவ்வளவு அதிக எண்ணிக்கையிலான குடமுழுக்குகள் நடத்திய ஆட்சி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சி

என்பதை நினைவில்கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த இராஜகோபுர திருப்பணிக்கான மண் பரிசோதனை முடிந்துவிட்டது. சென்றாயப்பெருமாள் திருக்கோயிலைப் பொறுத்தளவில், இது தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறைச் சட்டம் 1959, பிரிவு 49(i)-ன்கீழ் வருகின்ற திருக்கோயில். அந்தத் திருக்கோயிலுக்கு போதிய நிதி வசதி இல்லை என்றாலும்கூட, திருக்கோயிலில் உபயதாரர் நிதியில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி என்று பார்க்காமல், தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து கோயில்களுக்கும் கவனத்துடன் சமமாக நிதியை ஒதுக்கி வருகின்றார்கள். அவரை நான் இந்தச் சபையில் பாராட்டுகின்றேன்.

எங்களுடைய மேட்டூர் தொகுதிக்கு, சுமார் 15 கோடி ரூபாயை கோயில்களுக்கென்று வழங்கியிருக்கின்றார். அதற்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேச்சேரியில் மிகப் பிரசித்திபெற்ற பத்ரகாளியம்மன் கோயிலுக்கு நான்கரை கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கியிருக்கின்றார்கள். பக்தர்கள் தங்குமிடம், விருந்து மண்டபம் அமைக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அப்பணிகள் முடிவுற்று, எப்போது பக்தர்களின் பயன்பாட்டிற்கு வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. அருள் அவர்களின் சேலம் (மேற்கு) தொகுதியில், மிகவும் சக்திவாய்ந்த வெண்ணங்கொடி முனியப்பன் கோயில் இருக்கிறது. அங்கு ஒரு நாளைக்கு சுமார் 200, 300 வாகனங்களுக்கு பூஜை செய்கிறார்கள். ஆகவே, அங்கு நெரிசல் ஏற்படுகிறது. எனவே, ஒரு வழியில் செல்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நீண்ட வரிசையில் மக்கள் நிற்பதால், நிழற்கூடம் அமைத்துக் கொடுக்க வேண்டும். வருமானம் அதிகமாக இருக்கக்கூடிய வெண்ணங்கொடி முனியப்பன் கோயிலுக்கு

2024 பிப்ரவரி 21]

இந்தத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். எங்களுடைய வெள்ளாற்றுக் கோயிலில் குடமுழுக்கு செய்யப்படாமல் நிலுவையில் உள்ளது. அந்தக் கோயிலுக்கு குடமுழுக்கு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், என்னுடைய மேட்டூர் தொகுதிக்கு அதிகமாக நிதி ஒதுக்கித் தந்திருக்கின்றார்கள். அதேபோன்று 3 கோயில்கள். மேச்சேரி பசுபதீஸ்வரர் திருக்கோயில். . .(மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடம்தான். முடித்துவிடுகிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், மாவட்டம் முழுவதற்கும், எல்லா கோயில்களுக்கும் சொல்லிவிட்டீர்கள்.

திரு. S. சதாசிவம்: என்னுடைய தொகுதிதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லிவிட்டு உட்காருங்கள்.

திரு. S. சதாசிவம்: மேச்சேரி பசுபதீஸ்வரர் கோயிலுக்கு குடமுழுக்கு அறிவித்தீர்கள். அதேபோன்று, அமரம் காமாட்சி அம்மன் கோயிலுக்கு குடமுழுக்கு அறிவித்தீர்கள். புக்கம்பட்டி சென்றாயப்பெருமாள் கோயிலுக்கு குடமுழுக்கு அறிவித்தீர்கள். ஆனால், வேலை தொடங்கப்பட்ட நிலையிலே இருக்கிறது. அந்த வேலையை வேகப்படுத்தி குடமுழுக்கை எப்போது நீங்கள் நடத்துவீர்கள் என்று அன்புடன் கேட்டு அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலில் கோரிய மேச்சேரி பத்ரகாளியம்மன் திருக்கோயில் குறித்து, உறுப்பினருக்கு பதிலைச் சொல்ல விரும்புகின்றேன். அவர் கோரிய அந்தக் கோயிலில் 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் விருந்து மண்டபம், பக்தர்கள் தங்கும் மண்டபம், பணியாளர் குடியிருப்பு, வாகன நிறுத்துமிடம் போன்ற பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பணியினை முடிக்க

18 மாதங்கள் ஆகும். 2023 அக்டோபர் மாதம் துவங்கப்பட்டது. அந்த 18 மாத கால அளவிற்குள் அந்தப் பணிகள் நிச்சயம் முடித்துத் தரப்படும் என்பதைத் தெரிவிப்பதோடு, அவர் கோரிய காமாட்சி அம்மன் கோயில், பத்ரகாளியம்மன் கோயில்; அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அவர்களுடைய கோரிக்கை ஆகிய அனைத்தும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், இந்து சமய அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில், இன்னார், இனியவர் என்று பார்க்கக்கூடாது என்று உத்தரவிட்டதற்கிணங்க, அவருடைய அனைத்து கோரிக்கைகளும் இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக நிச்சயமாக நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலுள்ள முருகப்பெருமானின் நான்காம் படைவீடான சுவாமிமலை கோயிலுக்கு மின்தூக்கி வசதி செய்யப்பட வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை இந்தப் பேரவையிலே வைத்திருந்தேன். நீண்ட காலமாக நிறைவேற்றப்படாத அந்தக் கோரிக்கையை நிறைவேற்றிட நமது திராவிட மாடல் ஆட்சியிலே, கடந்த 17 ஆம் தேதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த மின்தூக்கிக்கான அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக முருக பக்தர்கள் அனைவரின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

எனது தொகுதியில் திருவலஞ்சுழியில் உள்ள வெள்ளை விநாயகர் கோயில் என்ற பெரியநாயகி அம்மன் உடனான கபர்தீஸ்வரர் கோயிலுக்குப் புதிய தேர் வடிவமைப்பதற்கும், சிதிலமடைந்திருக்கின்ற அந்தத் தேர் மண்டபத்தைச் சீரமைப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக வினவ விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

2024 பிப்ரவரி 21]

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறுபடை வீடுகள் கொண்ட முருகப்பெருமானின் நான்காம் படைவீடு சுவாமிமலை ஆகும். சுவாமிமலையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய ஆட்சியில் அறுபடை வீட்டிற்கு அவர் சேர்த்திருக்கின்ற பெருமையை ஒரே நிமிடத்தில் சொல்லி முடிக்க வேண்டுமென்று ஆசைப்படுகின்றேன். திருச்செந்தூர் திருக்கோயிலிலே, 300 கோடி ரூபாய் அளவிற்கு திருப்பணிகளை மேற்கொண்ட அரசு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) பழனியிலே 2010 ஆம் ஆண்டு வாழும் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 58 ஏக்கர் நிலப்பரப்பில் 58 கோடி ரூபாய் செலவிலே, பக்தர்களின் நலன் கருதி எதிர்கால தேவைக்கு நிலம் கையகப்படுத்துவதற்கு பிறப்பிக்கப்பட்ட ஆணைக்குச் செயல் வடிவம் தந்த ஆட்சி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய ஆட்சி. இதுவும் முருகப்பெருமானுடைய அறுபடை வீடுகளில் ஒன்று. முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் ஒன்றான திருப்பரங்குன்றத்திற்கும், திருநீர்மலை திருக்கோயிலுக்கும் இந்த நிதிநிலை அறிக்கையிலேயே சுமார் 26 கோடி ரூபாய் செலவில் rope car ஏற்படுத்தப்படுமென்ற அறிவிப்பைத் தந்த ஆட்சி, இந்த ஆட்சி. இதோடுமட்டுமல்ல; வயது முதிர்ந்த பக்தர்களின் ஏக்கத்தை அறிந்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இந்து சமய அறநிலையத் துறையின் வரலாற்றில் ஒரு புரட்சியாக இந்த அறுபடை வீடுகளுக்கு ஆண்டிற்கு 1,000 பேரை 60 வயது கடந்தவர்கள், 70 வயதிற்குள்ளானவர்களை சாமி தரிசனம் செய்ய அழைத்துச் செல்ல வேண்டுமென்று உத்தரவிட்டு, அதற்குண்டான நிதியை அரசின் சார்பிலேயே ஒரு கோடியே 58 இலட்சம் ரூபாயை வழங்கி உள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மொத்தம் 1,000 முருக பக்தர்கள். முதற்கட்டமாக 200 பேர் அந்த ஆன்மிகச் சுற்றுலாப் பயணத்தினை முடித்திருக்கின்றார்கள். தொடர்ந்து மார்ச் 7 ஆம் தேதி இரண்டாவது கட்டமாக, 200 பேரை அழைத்துச் செல்லவிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்க் கடவுள் முருகனுக்குப் பெருமை சேர்க்கின்ற ஆட்சி, இந்தத் தமிழ் ஆட்சி; மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆட்சி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கோரிய வெள்ளை விநாயகர் அருள்மிகு கபர்தீஸ்வரர் சுவாமி திருக்கோயில் திருப்பணிக்கு ரூ.4.55 கோடி

[2024 பிப்ரவரி 21

அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. புதிய தேர் வடிவமைப்பதற்கும், தேர் மண்டபத்தினைச் சீரமைப்பதற்கும் சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்கி, இன்றைக்கு இரத்தின சபைகளில் ஒன்றான திருவள்ளூரில் உள்ள திருவாலங்காடு திருக்கோயில் கும்பாபிஷேக விழா நடைபெறுகிறது. அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் இந்த நேரத்திலே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நீண்ட நாட்களாக கும்பாபிஷேகம் நடத்தாமல், பராமரிப்பின்றி திருக்கோயில் இருந்தது. நேற்று ஆய்வு செய்தபோது, பெரியளவுக்கு பராமரித்து, அந்தக் கோயிலின் கோபுரத்தைச் சிறப்பாக வடிவமைத்து வைத்திருக்கிறார்கள் என்பதை அறிய முடிந்தது. மாந்தீஸ்வரர் பூஜை ஒன்று அங்கு வாரந்தோறும் நடைபெறும். அதற்கு அதிகளவில் பக்தர்கள் வந்து, அவர்களுடைய மாந்தி பூஜை செய்வார்கள். அதன்மூலமாக, வாரம் ரூ.6 இலட்சம் கோயிலுக்கும் வருமானம் வருகிறது. ஆனால், அங்கு இடம் நெருக்கடியாக இருக்கக்கூடிய சூழ்நிலையில், ரூ.1,200/– தொகை செலுத்துபவர்கள்கூட நீண்ட வரிசையில் அமர வேண்டியுள்ளது. அதனால், பக்கத்தில் உள்ள காலியிடத்தில், சிறப்பு பூஜை செய்வதற்கு தனியாக மண்டபம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல், இன்றைக்கு பஞ்ச சபைகள் என்று போற்றப்படுகின்ற 5 திருக்கோயில்களில் திருவாலங்காடு சபையும் மிகப் பிரசித்திபெற்ற

2024 பிப்ரவரி 21]

கோயில். இன்றைக்கு எல்லாப் புகழும் இறைவனுக்கே என்பதுபோல் நடைபெறுகின்ற அனைத்துத் திருப்பணிகளுக்கும், குடமுழுக்குகளுக்கும் காரணமான திராவிட மாடல் அரசை, பக்தர்கள் அனைவரும் நெஞ்சார வாழ்த்துவதுபோல், இன்றைக்கு திருவாலங்காடு தொகுதியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினரும் வாழ்த்தியதற்கு நன்றி. அவர் கோரிய அந்த மண்டபம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருந்தால், இந்த ஆண்டே அந்தப் பணி எடுத்துக்கொள்ளப்பட்டு, வெகுவிரைவில் நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள்.*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலே 1,000 ஆண்டுகளுக்கு மேலாக பழமை வாய்ந்தது கோட்டை சங்கமேஸ்வரர் கோயில். அந்தக் கோயிலுடைய இராஜகோபுரம் அங்கு அமைக்கப்பட வேண்டும் என்பது அந்தப் பகுதி மக்களின், ஏன், எங்கள் ஒட்டுமொத்த மாவட்டத்தினுடைய கோரிக்கை. அதை நிறைவேற்றித் தருவாரா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சிறிய விவரத்தோடு, அவருடைய கேள்விக்கும் பதிலைத் தருகிறேன். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், 35 திருக்கோயில்களில் இராஜகோபுரங்களுக்கு 76 கோடியே 84 இலட்ச ரூபாய் செலவில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆக, இந்த 6 திருக்கோயில்களில் சமயபுரம் உட்பட இராஜகோபுரங்கள் திருப்பணி மற்றும் குடமுழுக்கு நடந்து முடிந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை உடனடியாக இந்த ஆண்டே பரிசீலிக்கப்பட்டு, இராஜகோபுரம் கட்டுவதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[*2024 பிப்ரவரி 21*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

40—

அறிவியல் ஆய்வகம்

***78461—டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், முள்ளிக்குளம் கிராமம், பாண்டியக்கோனார் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் அறிவியல் ஆய்வகம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக தாய்மொழி தினமான இன்று, புதுமைப் பெண்ணின் தாயாக, தமிழ்ப் புதல்வரின் தந்தையாக, ஊரகப் பகுதியைச் சார்ந்திருக்கின்ற, அரசு உதவி பெறுகின்ற பள்ளிகளிலும், காலை உணவு வழங்கப்படும் என்று சொன்ன தாயுமானவராக, (மேசையைத் தட்டும் ஒலி) 'தடைகளைத் தாண்டி வளர்ச்சியை நோக்கி' என்ற வகையில் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் தாக்கல் செய்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையில், சட்டமன்ற வரலாற்றிலேயே அதிகப்படியாக 44,042 கோடி ரூபாயை (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய பள்ளிக் கல்வித் துறைக்கு வழங்கியதற்கு, ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் சார்பாக எங்களுடைய நன்றியை நம்முடைய மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றேன்.*

முற்பகல் 11–25

என்னுடைய பதிலைத் தொடங்குவதற்கு முன்பாக, என்னுடைய தொகுதி சார்ந்த ஒரு பிரச்சினையை நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியில் இருக்கின்ற துவாக்குடியிலிருந்து